செய்தி வெளியீடு எண்: 055 நாள்: 22.01.2020

**மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. ஆர். காமராஜ், அவர்களின் அறிக்கை**

- 2020ம் ஆண்டு பொங்கல் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடும் விதமாக அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் 1 கிலோ பச்சரிசி , 1 கிலோ சர்க்கரை, 20 கிராம் உலர் திராட்சை, 20 கிராம் முந்திரி, 5 கிராம் ஏலக்காய், 2 அடி நீளக் கரும்புத் துண்டு உள்ளிட்ட பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்புடன், ரொக்கத் தொகை ரூ.1,000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) அரசால் வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் 29.11.2019 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.
- 09.01.2020 அன்று தொடங்கி 12.01.2020 வரை பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் பொங்கல் ரொக்கத் தொகை வழங்கவும் மற்றும் விடுபட்ட அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு 13.01.2020 அன்று பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரொக்கத் தொகை வழங்க ஆணையிடப்பட்டது.
- மேலும், பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் பொங்கல் ரொக்கத் தொகை பெறாத விடுபட்ட அரிசி குடும்ப அட்டைதாரர்களும் பயன்பெறும் வகையில் இத்திட்டம் 21.01.2020 வரை நீட்டித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கினார்.
- 30.11.2019ம் மாதத்தில் நடைமுறையில் இருந்த குடும்ப அட்டைகள் எண்ணிக்கை 1,95,05,846 ஆகும். மேலும், சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைதாரர்கள் அரிசி விருப்ப குடும்ப அட்டையாக மாற்றம் செய்து கொள்ள அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதனடிப்படையில் 4,51,614 சர்க்கரை பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு அவர்களது விருப்பத்தின்படி அரிசி விருப்ப

குடும்ப அட்டையாக மாற்றம் செய்யப்பட்டது. அவர்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரொக்கத் தொகை ரூ.1000/– வழங்க உத்தரவிடப்பட்டது.

- 31.12.2019 நிலவரப்படி புதிதாக அச்சடிக்கப்பட்டு வழங்கப்பட்ட அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களையும் சேர்த்து மொத்தம் 2,00,30,431 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரொக்கத் தொகை ரூ.1000/– வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்.
- 21.01.2020 வரை அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் 1,98,15,337 மற்றும் இலங்கை தமிழர் குடும்பங்கள் 18884 ஆக மொத்தம் 1,98,34,221 பயனாளிகள் பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரொக்கத் தொகை ரூ.1000/– கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது.

| குடும்ப அட்டைகள் விவரம் | பயனாளிகள் | அரிசி (மெ.டன்) | சர்க்கரை (மெ.டன்) | ரொக்கத் தொகை (ரூ.கோடியில்) | முந்திரி, உளர்திராட்சை, ஏலக்காய் (பாக்கெட்டுகளில்) | கரும்பு (2 அடி நீளம்) எண்ணிக்கையில் |
|---|---|---|---|---|---|---|
| அரிசி குடும்ப அட்டைகள் | 19815337 | 19815.337 | 19815.337 | 1981.53 | 19815337 | 19815337 |
| இலங்கை தமிழர்கள் | 18884 | 18.884 | 18.884 | 1.89 | 18884 | 18884 |
| **மொத்தம்** | **19834221** | **19834.221** | **19834.221** | **1983.42** | **19834221** | **19834221** |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**